# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 58/2013

Deposition of witness for : PW3

Name : மனோகர்

Father's Name : கோவிந்தன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 04th day of December 2024.

**04-12-2024**

**A1 to A4, A6 to A10 and A12 present. A14 produced. A5, A11 charges abated**

**முதல் விசாரணை:–**

நான் அஸ்தம்பட்டியில் 30.09.2011ம் தேதி வரை கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி, பணி ஓய்வு பெற்று தற்போது சேலம், வின்சென்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 23.01.2011ம் தேதி

அதிகாலை 1.30 மணிக்கு அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் தொலைபேசி மூலமாக என்னை அழைத்து அஸ்தம்பட்டி உழவர் சந்தை பின்புறம் உள்ள மேற்கு விநாயகர் கோவில் தெருவில் ஒரு கொலை சம்பவம் நடந்துள்ளதாகவும், விசாரணைக்கு உடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன் அடிப்படையில் நானும், எனது கிராம உதவியாளர் ரமேஷ் என்பவரும் அங்கு சென்றோம். அன்றைய தினமே அதிகாலை 1.45 மணியளவில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ–P2** ஆகும். அன்றைய தினமே காலை 6.45 மணியளவில் காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்கு விநாயகர் கோவில் தெருவில் உள்ள பொதுகழிப்பிடத்தில் இருந்து ரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை மண் சிறிதளவு, ரத்தக்கறை படியாத மண் சிறிதளவு, மூடி இல்லாமல் காலியாக இருந்த கிங் பிசர் பீர் பாட்டில் ஒன்று, ரத்தக்கறை படிந்த உடைந்த நிலையில் இருந்த பீர் பாட்டில் ஒன்று, மூடியுடன் கூடிய காலிய உள்ள பீர்பாட்டில் ஒன்று, மூடி இல்லாத காலியாக உள்ள பிராந்தி பாட்டில் ஒன்று, எவர் சில்வர் சொம்ப ஒன்று, பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று, 5214 என்ற எண்ணுடைய காலிபர் பைக் ஒன்று ஆகியவற்றை மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அந்த மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி

கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் **அ.த.சா.ஆ–P3** ஆகும்.

ரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை மண் சிறிதளவு. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–1** ஆகும். ரத்தக்கறை படியாத மண் சிறிதளவு. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–2** ஆகும். மூடி இல்லாமல் காலியாக இருந்த கிங் பிசர் பீர் பாட்டில் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–3** ஆகும். ரத்தக்கறை படிந்த உடைந்த நிலையில் இருந்த பீர் பாட்டில் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–4** ஆகும். மூடியுடன் கூடிய காலிய உள்ள பீர்பாட்டில் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–5** ஆகும். மூடி இல்லாத காலியாக உள்ள பிராந்தி பாட்டில் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–6** ஆகும். எவர் சில்வர் சொம்ப ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–7** ஆகும். பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–8** ஆகும். 5214 என்ற எண்ணுடைய காலிபர் பைக். நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–9** ஆகும்.

அதன் பின்னர் அன்று காலை 7.30 மணியளவில் மேற்கு விநாயகர் கோவில் தெரு கழிப்பிடத்திற்கு எதிரே உள்ள தார்ரோட்டில் இருந்த பெயர்த்து எடுக்கப்பட்ட ரத்தக்கறையுடன் கூடிய மண் சிறிதளவு, ரத்தக்கறை இல்லாத மண் சிறிதளவு, DAXIAN செல்போன் ஒன்று ஆகியவற்றை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அந்த மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் **அ.த.சா.ஆ–P4** ஆகும்.

தார்ரோட்டில் இருந்த பெயர்த்து எடுக்கப்பட்ட ரத்தக்கறையுடன் கூடிய மண் சிறிதளவு. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–10** ஆகும். ரத்தக்கறை இல்லாத மண் சிறிதளவு. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–11** ஆகும். DAXIAN செல்போன் ஒன்று. நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–12** ஆகும்.

அதன் பின்னர் அன்றை தினமே காலை 8.00 மணிக்கு மேற்கு விநாயகர் கோவில் தெரு பொதுகழிப்பிடத்திற்கு தார்ரோட்டில் தெற்குபுறம் வெள்ளை நிற டாடா இண்டிகா கார், அதன் பதிவு எண். 9563, ஒரு கருப்பு நிற ஹுண்டாய் கார் 4027 ஆகியவற்றை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P5** ஆகும்.

அதன் பின்னர் 25.01.2011ம் தேதி காலை 10.30 மணியளவில் அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு இவ்வழக்கு சம்மந்தப்பட்ட மூன்று எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாகவும், அஸ்தம்பட்டி ஏற்காடு மெயின் ரோட்டில் முனியப்பன் கோவில் எதிரில் எங்களை வரச்சொன்னார். அதன் பேரில் நானும், எனது உதவியாளரும் அங்கு சென்றோம். தீலிப் (எ) தீலிப்குமார் (A11), விஜி (எ) விஜயகுமார் (A12), கோபி (எ) கோபிநாத் (A13) ஆகியோர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள்.

தீலிப் (எ) தீலிப்குமார் (A11) தானாக முன்வந்து அன்று காலை 11.30 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஒப்படைப்பதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

விஜி (எ) விஜயகுமார் (A12) தானாக முன்வந்து அன்று பகல் 1.00 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஒப்படைப்பதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

கோபி (எ) கோபிநாத் (A13) தானாக முன்வந்து அன்று மதியம் 2.30 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஒப்படைப்பதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே மாலை 4.30 மணிக்கு திலீப்(எ) திலீப் குமார் சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோட்டின் ஓரத்தில் உள்ள முற்புதரில் இருந்து மறைத்து வைத்திருந்த வீச்சறிவாளை எடுத்து

ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P6** ஆகும். திலீப்(எ) திலீப் குமார் எடுத்து ஆஜர் செய்த வீச்சறிவார் நீதிமன்றத்தில் உள்ள வீச்சறிவாளகளில் சாட்சி அடையாளம் காட்டினார். அது **சா.பொ–13** ஆகும்.

அன்றைய தினமே மாலை 5.00 மணிக்கு விஜி (எ) விஜய குமார் சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோட்டின் ஓரத்தில் உள்ள முற்புதரில் இருந்து மறைத்து வைத்திருந்த உருட்டுக்கட்டையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P7** ஆகும். திலீப்(எ) திலீப் குமார் எடுத்து ஆஜர் செய்த உருட்டு கட்டை நீதிமன்றத்தில் இருந்த உருட்டுக்கடைகளில் சாட்சி அடையாளம் காட்டிய உருட்டுக்கட்டை **சா.பொ–14** ஆகும்.

அன்றைய தினமே மாலை 5.30 மணிக்கு கோபி(எ) கோபிநாத் சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோட்டின் ஓரத்தில் உள்ள முற்புதரில் இருந்து மறைத்து வைத்திருந்த உருட்டுக்கட்டையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P8** ஆகும். கோபி (எ) கோபிநாத் எடுத்து ஆஜர் செய்த

உருட்டு கட்டை நீதிமன்றத்தில் இருந்த உருட்டுக்கடைகளில் சாட்சி அடையாளம் காட்டிய உருட்டுக்கட்டை **சா.பொ–15** ஆகும்.

அதன் பின்னர் 04.02.2011 ம் தேதி மாலை 4.30 மணியளவில் காவல் ஆய்வாளர் எனக்கு அழைத்து இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை காவல்படுத்தி வைத்திருப்பதாகவும், விசாரணைக்கு உதவியாக இருக்குமாறு அஸ்தம்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்தார். அதன் பேரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் காவல் நிலையம் சென்றோம். கார்த்தி (எ) நெட்ட கார்த்தி, பிரதாப், வினோத்(எ) வினோத் குமார், முரளி (எ) முரளிகிருஷ்ணா, மணி (எ) கேரளா மணி ஆகிய ஐந்து நபர்களும் அங்கு இருந்தார்கள்.

அன்றைய தினமே மாலை 5.00 மணியளவில் எதிரி கார்த்தி (எ) நெட்ட கார்த்தி(A5) என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்மந்தப்பட்ட வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே இரவு 7.00 மணியளவில் எதிரி பிரதாப்(A4) என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்மந்தப்பட்ட வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்

நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே இரவு 9.00 மணியளவில் எதிரி வினோத் (எ) வினோத்குமார் (A7) என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்மந்தப்பட்ட வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே இரவு 10.00 மணியளவில் எதிரி முரளி (எ) முரளிகிருஷ்ணா(A8) என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்மந்தப்பட்ட வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே இரவு 11.00 மணியளவில் எதிரி மணி (எ) கேரளா மணி (A9) என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் வழக்கு சம்மந்தப்பட்ட வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி

கையொப்பம் செய்தோம்.

05.02.2011ம் தேதி காலை 7.30 மணியளவில் கார்த்தி (எ) நெட்ட கார்த்தி(A5) அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அஸ்தம்பட்டி தண்ணீர் டேங்க் பின்புறம் உள்ள முற்புதரில் இருந்து அடையாளம் காட்டி வீச்சறிவாளை எடுத்து ஆஜர்படுத்தினார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P9** ஆகும்.

05.02.2011ம் தேதி காலை 8.15 மணியளவில் பிரதாப்(A4) அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோடு பெரியாண்டிச்சியம்மன் கோவில் வீச்சறிவாளை எடுத்து ஆஜர்படுத்தினார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P10** ஆகும்.

05.02.2011ம் தேதி காலை 9.00 மணியளவில் வினோத் (எ) வினோத்குமார் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோடு முற்புதாரில் இருந்து வீச்சறிவாளை எடுத்து ஆஜர்படுத்தினார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P11** ஆகும்.

05.02.2011ம் தேதி காலை 9.45 மணியளவில் முரளி (எ) முரளிகிருஷ்ணா (A8) அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோடு முற்புதாரில் இருந்து வீச்சறிவாளை எடுத்து ஆஜர்படுத்தினார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P12** ஆகும்.

05.02.2011ம் தேதி காலை 10.30 மணியளவில் மணி (எ) கேரளா மணி (A9) அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் ரோடு முற்புதாரில் இருந்து வீச்சறிவாளை எடுத்து ஆஜர்படுத்தினார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P13** ஆகும்.

அந்த கைப்பற்றிய வீச்சறிவாள்கள் நீதிமன்றத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளவைகள் தான். அது எது என்று குறிப்பாக அடையாளம் காட்ட இயலவில்லை. அவைகள் ஒரே போல் உள்ளது. அந்த ஐந்து வீச்சறிவாள்கள் **சா.பொ–16 வரிசகைள்** ஆகும் (5 எண்ணிக்கை). **(நீதிமன்றத்தில் மொத்தம் 11 வீச்சறிவாள்கள் உள்ளது. அவைகளில் எந்தெந்த வீச்சறிவாள்கள் எந்தெந்த சான்று பொருளாக குறியீடு செய்யப்படுகிறது என்று குறிப்பாக அடையாளப்படுத்த முடியாது என்றும், எனவே சான்று பொருட்களாக குறியீடு செய்ய எதிரிகள்**

**தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, சாட்சி அடையாளம் காட்டிய வீச்சறிவாள்கள் சான்று பொருள்களாக குறியீடு செய்யப்பட்டது).**

09.02.2011ம் தேதி மாலை 3.00 மணியளவில் அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் அஸ்தம்பட்டி காவல் நிலையத்திற்கு என்னையும், எனது உதவியாளரையும் வருமாறு அழைத்தார். அதன் பேரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் அங்கு சென்றோம். எலும்பன் கார்த்தி(A6) என்பவர் அங்கு இருந்தார். அவரை காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் இந்த வழகிற்கு சம்பந்தப்பட்ட ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதன் பிறகு அன்றைய தினமே மாலை 3.30 மணியளவில் தென்றல் நகர் முற்புதாரில் இருந்து வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P14** ஆகும்.

பின்னர் 17.02.2011ம் தேதி மதியம் 2.00 மணியளவில் அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் அஸ்தம்பட்டி காவல் நிலையத்திற்கு என்னையும், எனது உதவியாளரையும் வருமாறு அழைத்தார். அதன் பேரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் அங்கு சென்றோம்.

அங்கு எதிரி பல்சர் சந்துரு (எ) சந்தரகாந்த் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் இந்த வழகிற்கு சம்பந்தப்பட்ட வீச்சறிவாளை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அன்றைய தினமே 4.30 மணியளவில் சென்ட்ரல் ஜெயில் பின்புறம் உள்ள தென்றல் நகர் முற்புதாரில் இருந்து வீச்சறிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதற்கு ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P15** ஆகும். 6 வது எதிரி எலும்பன் கார்த்தி மற்றும் 10 வது எதிரி பல்சர் சந்துரு ஆகியோர்கள் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வீச்சறிவாள்கள் நீதிமன்றத்தில் உள்ளவைகள் தான். நீதிமன்றத்தில் உள்ள 11 வீச்சறிவாள்களில் அவைகளில் குறிப்பாக அடையாளம் காட்ட இயலாது. அவைகளில் உள்ள இரண்டு வீச்சறிவாள்கள் அந்த எதிரிகள் எடுத்து ஆஜர்படுத்தினார்கள். அந்த இரண்டு வீச்சறிவாள்கள் முறையே **சா.பொ–17 வரிசைகள்** ஆகும்.

பின்னர் 25.02.2011ம் தேதியன்று காலை 9.00 மணியளவில் ஆய்வாளர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு சேலம், டவுன் ரயில் ஸ்டேசன் மேம்பாலம் அருகில் மரவனேரி பகுதியில் ராதா (எ) ராதாகிருஷ்ணன் (A14) என்பவரை பிடித்து வைத்திருப்பதாக வரச்சொன்னார். அதன் பேரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ்

என்பவரும் அங்கு சென்றோம். அவரை ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட உருட்டு கட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அன்றைய தினமே காலை 11.30 மணியளவில் அஸ்தம்பட்டி, தண்ணீர் டேங்க் பின்புறம் உள்ள முற்புதாரில் இருந்து உருட்டு கட்டையை எடுத்து ஆஜர்படுத்தினார். அதனை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P16** ஆகும். அந்த உருட்டுக்கட்டை நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–18** ஆகும்.

அந்த எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளவர்கள் தான். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1 மற்றும் 6 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பணி நடைமுறை விதிமுறைகள் உள்ளது என்றால் ஆமாம். அதன்படி கிராம நிர்வாக அதிகாரி பணி நிமித்தமாக வெளி இடங்களுக்கு செல்லும் போது அதை பற்றிய தகவல்களை உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் ஆமாம். மூவ்மண்ட் ரிஜிஸ்டர் பராமரிக்க வேண்டும் என்றால் ஆமாம். அது நடைமுறையில் உள்ளது என்றால் ஆமாம். நான் ஆய்வாளருடன் வழக்கு சம்மந்தமாக பல்வேறு தேதிகளில், பல்வேறு இடங்களில் சென்றதாக

கூறப்படும் நாட்களுக்கு என்னுடையை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததாக எழுத்து மூலமான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆய்வாளர் அத்தகையை ஆவணங்களை என்னிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் ஆமாம். பல்வேறு இடங்களுக்கு சென்றது சம்மந்தமாக ஆவணங்கள் இல்லை என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P2 பார்வை மகஜரில் சம்பவ இடத்தின் சுற்று வட்டாரத்தின் அனைத்து விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P3 கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சான்று பொருட்களை கைப்பற்றினார்கள் என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P3 ல் கைப்பற்றிய பொருட்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டதா இல்லையா என்று எனக்கு தெரியாது. அ.த.சா.ஆ–P4 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 3 வது அயிட்ட செல்போன் மற்றும் மற்றும் அ.த.சா.ஆ–P5 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டு கார்கள், அ.த.சா.ஆ–P3 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த போது அங்கு இல்லை என்றால் ஆமாம். மற்றும் அ.த.சா.ஆ–P3 காலை 6.45 மணிக்கும், மற்றும் அ.த.சா.ஆ–P4 காலை 7.30 மணிக்கும், மற்றும் அ.த.சா.ஆ–P5 காலை 8.00 மணிக்கு தயார் செய்யப்பட்டது. கைப்பற்றிய பொருட்கள் வழக்கிற்கு சம்மந்தப்பட்டதா என்று எனக்கு தெரியாதா என்றால் ஆமாம். எதிரிகளின் வழக்கறிஞர் சாட்சியிடம் 1, 6 எதிரிகள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று வினவ சாட்சி ஆமாம் என்று கூறுகிறார். சான்று பொருட்கள் வீச்சறிவாள்கள் மற்றும் உருட்டுகட்டைகள் இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதா என்று எனக்கு

தெரியாது என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P6 முதல் அ.த.சா.ஆ–P8 வரையிலான கைப்பற்றுதல் மகஜர்கள் ஒரே இடத்தில் ஒரே இடத்தில் கைப்பற்றியதாக கண்டுள்ளது என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P6 4.30 மணிக்கு கைப்பற்றிய போது அ.த.சா.ஆ–P7 மற்றும் அ.த.சா.ஆ–P8 ல் கண்டுள்ள பொருட்கள் அங்கு இல்லை என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P10 மற்றும் அ.த.சா.ஆ–P13 கைப்பற்றுதல் மகஜர்கள் ஒரே இடத்தில் இருந்து கைப்பற்றியதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P10 கைப்பற்றிய போது அ.த.சா.ஆ–P11 கண்டுள்ள பொருட்கள் அங்கு இல்லை என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P12 கைப்பற்றியபோது அ.த.சா.ஆ–P14, அ.த.சா.ஆ–P15, அ.த.சா.ஆ–P16 வரையிலான கைப்பற்றுதல் மகஜரில் கண்டுள்ள பொருட்கள் அங்கு இல்லை என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாக போலிஸ் அதிகாரிகள் எப்போது அங்கு வந்தார்கள் என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. தென்றல் நகர், ஆத்துக்காடு, சென்ட்ரல் ஜெயில் பின்புறம், மேற்கு விநாயகர் கோவில் தெரு ஆகிய இடங்கள் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் ஆமாம். ஆத்துக்காடு என்ற இடத்திற்கு போகும் போது காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் குடியிருப்புகள் உள்ளது என்றால் ஆமாம். அந்த குடியிருப்புகளுக்கு முன்னர் காவல் துறையினர் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் இருப்பார்கள் என்றால் ஆமாம். சா.பொ–1 முதல் சா.பொ–18 வரையிலான சான்று பொருட்களில் என் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் ஆமாம். கைப்பற்றிய சான்று பொருட்கள் குறித்து தனிப்பட்ட அடையாளங்கள் எதுவும் நான் குறித்து

வைக்கவில்லை என்றால் ஆமாம். கைப்பற்றிய பிறகு சான்று பொருட்கள் அனைத்தும் எவ்வாறு பராமரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. சா.பொ–1 முதல் சா.பொ–18 வரையிலான சான்று பொருட்களை சீல் செய்து கைப்பற்றப்படவில்லை என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் நான் கையெழுத்து மட்டும் செய்துவிட்டு, ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எதிரிகளிடமிருந்து எந்த விதமான சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 வது எதிரிகள் தரப்பில் 1,6 எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. என்னுடைய சாட்சியமும், ஆவண சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>7 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்து.

**<u>2, 4 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்து. காவல் ஆய்வாளர் அலுவல் ரீதியாக என்னை அழைத்தார். நான் கையெழுத்து செய்த ஆவணங்களில் என்னுடைய

அலுவலக முத்திரை பதிக்கவில்லை என்றால் ஆமாம். அலுவல் ரீதியாக நான் பணி செய்யும் போது என்னுடைய முத்திரை வைக்கவேண்டும் என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் முத்திரை வைக்காததிற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. குற்ற வழக்குகளில் நான் சாட்சியாக இருக்கும் போது ஒரு அறிக்கை தயார் செய்து மூன்று பிரதி எடுக்க வேண்டும் என்றால் அது நடைமுறையில் இல்லை. கிராம நிர்வாக அலுவலர் விதிமுறை பதிவேட்டில் உள்ளது என்றால் ஆமாம். மூன்று நாட்கள் என்னை ஆய்வாளர் சாட்சியாக இருக்க அழைத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த மூன்று நாட்களுக்கு நான் சொந்த செலவில் வந்தேன். படி, பணம் எதுவும் வாங்கவில்லை. 23.01.2011 அன்று நான் வீட்டில் இருந்தபோது ஆய்வாளர் என்னை அழைத்தார். அ.த.சா.ஆ–P2 ஐ யார் எழுதினார்கள் என்று என்னால் குறிப்பாக கூற இயலாது. 23.01.2011 அன்று தயார் செய்த ஆவணங்களை காவல் ஆய்வாளர் எழுதினார் என்று சாட்சி தற்போது கூறுகிறார். அ.த.சா.ஆ–P2 பார்வை மகஜரில் 2ம் பக்கத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து யார், எதற்காக போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. 23.01.2011 அன்று நான் செல்வதற்கு முன்னரே போலிசார் அங்கு இருந்தார்கள் என்றால் ஆமாம். சா.பொ–4 முதல் சா.பொ–8 வரையிலான சான்று பொருட்களை யார் கவரில் போட்டு அதை பேக் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. 23.01.2011ம் தேதி நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் என் முன்னிலையில் எந்தவிதமான சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனடிப்படையில் கைப்பற்றுதல் மகஜர்கள் தயார் செய்யப்படவில்லை

என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ–P2 மற்றும் அ.த.சா.ஆ–P3 ஆகிய ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 04.02.2014 ம் தேதி 4 வது எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எந்தவிதமான சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சான்று பொருட்கள் கைப்பற்றியதாக கூறப்படும் இடங்கள் போலிசாரின் கட்டுப்பாட்டில் உள்ள இடம் என்பதால் அந்த இடத்தில் கைப்பற்றியதாக கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>8 முதல் 10, 14 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.சம்பவ இடத்தில் பொருட்களை பார்வையிட்ட பிறகு, அதன் பிறகு பார்வை மகஜர் மற்றும் பொருட்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் ஆமாம். சம்பவ இடத்தில் பிரேதத்தின் தலை கிழக்குபுறமாக கால் மேற்குபுறமாகவும் இருந்தது. சம்பவ இடத்தில் பொது கழிப்பறையில் இருந்து சாலை வரை ரத்தக்கறை இருந்தது. பிரேதத்தின் சட்டை பையில் ஆய்வாளர் சோதனை செய்து பார்த்தாரா என்று நான் கவனிக்கவில்லை. பிரேதத்தின் மீது ஆபரணங்கள் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. கார் நின்ற தார் சாலையில் வேறு எங்காவது ரத்தக்கறை இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. கைப்பற்றிய கார்கள் பூட்டிய நிலையில் இருந்ததா

அல்லது திறந்து பார்த்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. இரண்டு கார்களும் ஒன்றன் பின் ஒன்றாக நின்று கொண்டிருந்தது. 10 –15 அடி இடைவெளியில் கார்கள் நின்று கொண்டிருந்தது. பிரேத்தின் உடலில் கண்ணாடி துண்டு இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. பிரேத்தின் உடம்பில் இருந்த உடைகளின் நிறம் நான் கவனிக்கவில்லை. சம்பவ இடத்தில் அரை மணி நேரம் இருந்தேன். பின்னர் 2.30 மணிக்கு வீட்டிற்கு சென்று விட்டு 6.30 மணிக்கு திரும்ப வந்தேன். அந்த இடைப்பட்ட நேரத்தில் அங்கு நடந்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அ.த.சா.ஆ–P2 முதல் அ.த.சா.ஆ–P 5 வரையிலான ஆவணங்கள் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. 8 முதல் 10 மற்றும் 14 எதிரிகளின் வாக்குமூலங்கள் எத்தனை பக்கங்களில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கடைசி பக்கத்தில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கிய பின்னிட்டு ஒப்புதல் வாக்குமூலங்கள் போலிசாரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் கைப்பட எழுதினார். A10, A14 ஒப்புதல் வாக்குமூலங்கள் வெவ்வேறு கையெழுத்துக்களில் உள்ளது என்றால் ஆமாம். அவைகளில் எதை ஆய்வாளர் எழுதினார் என்று தெரியாது. அதில் உள்ள கையெழுத்துக்களில் ஒன்று ஆய்வாளருடையது. மற்றொன்று யாருடையது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜர்களை யார் கைப்பட எழுதினார்கள் என்று குறிப்பாக கூற இயலாது

என்றால் ஆமாம். சா.பொ–12 செல்போனில் சிம்கார்டு இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. செல்போனின் பின்னால் DAXIAN என்று இருந்தது. முன்பக்கம் எதுவும் இல்லை. செல்போனின் பேட்டரி கைப்பற்றப்பட்டதா என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் போலிசார் செல்போனில் உள்ள அழைப்புகளை சரிபார்க்கவில்லை. வீச்சறிவாள்கள் சா.பொ–13, சா.பொ 16 மற்றும் 17 ஆகியவைகள் போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும், அவைகள் மொத்தமாக ஒரே இடத்தில் வாங்கி வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 8 முதல் 10 மற்றும் 14 எதிரிகள் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் எந்தவிதமான சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றும், கைப்பற்றுதல் மகஜர்கள் அனைத்தும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அதில் நான் கையெழுத்து போட்டுவிட்டு, போலிசாருக்கு ஆதரவாக பொய சாட்டசியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இறந்துபோன நபர்களை பார்க்கவில்லை என்றால் உறவினர்கள் யார் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் 100 பேர் இருந்தார்கள்.

**<u>13 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஓம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.